275
3-55

# கண்ணன் வாசகம்

இரண்டாம் புத்தகம்

MADRAS

காரியாலயம், சென்னை-4

TB
031 (2)
N55

# கண்ணன் வாசகம்

இரண்டாம் புத்தகம்
(இரண்டாம் வகுப்புக்கு உரியது)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
15 JUL 1955
MADRAS

ஆசிரியர்
வித்வான் சி. முத்துக்கிருட்டின நாட்டார்
தலைமைத் தமிழாசிரியர்,
கழக உயர்நிலைப் பள்ளி, ஐயம்பேட்டை.

உரிமை பதிவு]
கலைமகள் காரியாலயம்
மயிலாப்பூர் :: சென்னை-4.
[விலை அணா 6

முதற் பதிப்பு—நவம்பர், 1952.
இரண்டாம் பதிப்பு—மே, 1953.
மூன்றாம் பதிப்பு—ஜூன், 1955.

சென்னை-600 008
133522

Approved by the Text-Book Committee, Madras, for class use,
*Vide* Fort St. George Gazette, Part I-B, Supplement,
Dated 19-5-1954, page 22.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, MADRAS - 4.

# முகவுரை

கண்ணன் வாசகங்கள் சிறு வகுப்புக்களில் பயிலும் சிறுவர் சிறுமியருக்கு ஏற்ப மிக்க கவனத்துடன் துரைத்தனத்தாரின் புதிய பாடத் திட்டத்தைத் தழுவி எழுதப் பெற்றுள்ளன. புதிய சொற்கள், நடை இவற்றுள் புத்தகங்கள் படிப்படியாக உயர்ந்து வருவது ஒரு முறை இவற்றை நோக்குவார்க்குப் புலனாகும், இந்தப் புத்தக வரிசையில் அமைந்துள்ள சில அம்சங்களாவன :

(1) படங்களும் பாடங்களும் பிள்ளைகள் நடைமுறையில் பார்க்கும் விஷயங்களை விளக்குவனவாகும். படங்கள் மிகுதியாக இந்த வரிசையில் அமைந்திருக்கின்றன. ஆசிரியரும் மாணவரும் அவைகளை அவசியம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். (2) பாடல்கள் பிள்ளைகளுக்கு உற்சாகத்தை அளிக்கக்கூடியவை. (3) சம்பாஷணைகள், நாடகங்கள், கதைகள் இவைகள் தக்கபடி இடம் பெற்றுள்ளன. (4) மௌன வாசகத்துக்கு ஏற்ற பாடங்கள் பிள்ளைகளுக்குச் சுவையுள்ளனவாக அமைந்திருக்கின்றன. (5) பயிற்சிகள் பிள்ளைகளின் இலக்கிய அறிவையும் பொது அறிவையும் வளர்க்கக் கூடியவை. ஆசிரியர் இந்தப் பயிற்சிகள் விஷயமாக விசேஷமான கருத்தைச் செலுத்துவது நல்லது.

இப் புத்தக வரிசைகளைத் தயார் செய்யும் விஷயத்தில் எனக்குத் துணையாக இருந்து இன்றியமையாத யோசனைகளைக் கூறிய வித்துவான் ஸ்ரீ ச. கு. கணபதி ஐயர், எம். ஏ. அவர்களுக்கு நான் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறேன்.

—ஆசிரியர்

# பொருள் அடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | குடும்பம் | 5 |
| 2. | எங்கள் பள்ளிக்கூடம் | 6 |
| 3. | எங்கள் வகுப்பு | 7 |
| 4. | அறிவுள்ள நாய் | 8 |
| 5. | புதிய எழுத்துக்கள் | 10 |
| 6. | கெட்டிக்காரன் | 11 |
| 7. | காற்றுடி | 13 |
| 8. | பருத்தியும் ஆடையும் | 15 |
| 9. | உபகாரம் வீண் போகாது | 16 |
| 10. | சந்தை | 19 |
| 11. | ஆனை ஆனை | 21 |
| 12. | புகை வண்டி | 22 |
| 13. | சந்திரன் | 24 |
| 14. | படமும் பழமொழியும் | 25 |
| 15. | நிலாவோடு சம்பாஷணை | 27 |
| 16. | தென்னுலி ராமன் | 28 |
| 17. | கோழிகள் | 30 |
| 18. | பருவங்கள் | 32 |
| 19. | தீபாவளி | 34 |
| 20. | தீபாவளிப் பாட்டு | 36 |
| 21. | பிறந்த நாள் | 38 |
| 22. | உயிர் வகைகள் | 40 |
| 23. | பாப்பாவும் பிராணிகளும் | 41 |
| 24. | கால் போனுல் என்ன ஆகும்? | 42 |
| 25. | இரட்டைச் சொற்கள் | 42 |
| 26. | தாயக்கட்டம் | 43 |
| 27. | காகிதக் கத்தரிப்பு | 45 |
| 28. | காந்தி அடிகள் | 47 |
| 29, | சுக வழி | 48 |
| 30. | படம் பார்த்துப் படித்தல் | 49 |
| 31. | மனிதனும் குரங்கும் | 50 |
| 32. | திருட்டுப் பூனை | 52 |
| 33. | திருவிழா | 54 |
| 34. | அம்புலி வேண்டிய இராமன் | 55 |

செய்யுள் பாடம்

| | | |
|---|---|---|
| 1. | ஆத்திசூடி | 57 |
| 2. | உலக நீதி | 58 |
| 3. | பாப்பாவுக்குப் புத்திமதி | 60 |

# கண்ணன் வாசகம்

## இரண்டாம் புத்தகம்



## 1. குடும்பம்

1. படத்தைப் பாருங்கள்.
2. தாயார் என்ன செய்கிறார்?
3. புத்தகம் படிப்பவர் யார்?
4. தொட்டிலில் இருப்பது என்ன?
5. தங்கை தொட்டிலை ஆட்டுகிறாள்.
6. அண்ணன் எழுதுகிறான்.
7. இவர்கள் எல்லோரும் சேர்ந்தது குடும்பம்.

**கேள்விகள்**

**உங்கள் குடும்பத்தில் யார் யார் இருக்கிறார்கள்?**



## 2. எங்கள் பள்ளிக்கூடம்

எங்சள் பள்ளிக்கூடம் ஊரின் நடுவில் இருக் கிறது. பின்புறம் தோட்டம் இருக்கிறது. பக்சத்தில் விளையாடும் இடம் இருக்கிறது. எங்சள் பள்ளிக் கூடத்தில் ஐந்து வகுப்புச்சள் உள்ளன.

காலையில் பள்ளிக்கூடம் போவோம்; சடவுளை வணங்குவோம். பிறகு பாடங்சளைப் படிப்போம். கணக்குப் போடுவோம். எங்சள் பள்ளிக்கூடம் சிறந்தது என்று பெருமை சொல்வோம்.

### கேள்விகள்

1. உங்கள் பள்ளிக்கூடத்தின் பெயர் என்ன?
2. அதில் எத்தனை வகுப்புக்கள் இருக்கின்றன?

### பயிற்சி

பின்புறம்—இதற்கு எதிர் வார்த்தை முன்புறம். காலை—இதற்கு எதிர் வார்த்தை மாலை. பின் வரும் பதங்களுக்கு எதிர் வார்த்தை தெரிந்துகொள்ளுங்கள்: பகல், நல்லவன், வா, நில்.



## 3. எங்கள் வகுப்பு

இது இரண்டாம் வகுப்பு. இதில் இருபது பிள்ளைகள் படிக்கிறார்கள். பிள்ளைகள் பாயின்மேல் உட்கார்ந்திருக்கிறார்கள். உபாத்தியாயரும் ஒரு பாயின்மேல் உட்கார்ந்திருக்கிறார். ஒவ்வொரு பையனுக்கும் ஒரு சாய்வு மேசை இருக்கிறது. வகுப்பில் கரும் பலகை இருக்கிறது. ஆசிரியர் அதில் எழுதுவார். வகுப்பில் இப்பொழுது கணக்குப் பாடம் நடக்கிறது. சுவரில் படங்கள் காணப்படுகின்றன.

### கேள்விகள்

1. உன் வகுப்பில் எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள்?
2. ஆண் பிள்ளைகள் எத்தனை? பெண் பிள்ளைகள் எத்தனை?
3. நீங்கள் எதன்மேல் உட்காருகிறீர்கள்?
4. வகுப்பில் என்ன என்ன படங்கள் இருக்கின்றன?

# 4. அறிவுள்ள நாய்

ஓர் ஊரில் ஒரு நாய் இருந்தது. அதன் கால் காயப்பட்டு நொண்டியாகி விட்டது. அதனால் நடக்க முடியவில்லை.



காயப்பட்டவர்கள் வைத்திய சாலைக்குப் போவார்கள். வைத்தியர் காயத்துக்கு மருந்து போட்டுக் கட்டுக் கட்டுவார். அதை அந்த நாய் பார்த்திருக்கிறது.



அதனால் அது நொண்டி நொண்டி வைத்தியசாலைக்குப் போனது. வைத்தியர் அதன் காலுக்குக் கட்டுப் போட்டு அனுப்பினார். சில நாளில் அதன் கால் சரியாகிவிட்டது.



ஒரு நாள் வேறு ஒரு நாய் நொண்டுவதை அந்த நாய் பார்த்தது. பார்த்துவிட்டு அதன் அருகில் சென்றது. தன்னோடு வரும்படி அந்த நாயை அழைத்தது. பிறகு பழைய நாய் அதையும் வைத்தியரிடம் அழைத்துச் சென்றது.

வைத்தியர் புதிதாகவந்த நாயின் காலுக்கும் கட்டுப் போட்டு அனுப்பினார். பழைய நாயின் அறிவைக் கண்டு அவர் மகிழ்ச்சி கொண்டார்.



### கேள்விகள்

1. வைத்தியசாலைக்குச் செல்லவேண்டும் என்று நாய்க்கு எப்படித் தெரிந்தது?
2. முதல் நாயை வைத்தியர் ஏன் மெச்சினார்?

### பயிற்சி

1. வைத்தியசாலை, வைத்தியர்: இந்த வார்த்தைகளை வழக்கத்தில் எப்படி உபயோகிக்கிறார்கள்?
2. பார்த்தது: இந்த அர்த்தத்தில் வரும் வேறு சொற்கள் எவை?

# 5. புதிய எழுத்துக்கள்



மேஜை



புஸ்தகம்



ஹாரம்



பக்ஷி



புஷ்பம்

சம்ஸ்கிருதம் ரோஜாப் பூ

பாஷை கஸ்தூரி

மஹாவீரர் வருஷம்

பக்ஷம் லக்ஷ்மி

ஜ ஸ ஷ க்ஷ ஹ

### பயிற்சி

நீ இப்பாடத்தில் தெரிந்துகொண்ட புதிய எழுத்துக்கள் வரும்படி சில வார்த்தைகளை எழுது.

# 6. கெட்டிக்காரன்





குட்டிக் கரணம் போடுவதில்
குப்பன் நிரம்பக் கெட்டிக்காரன்.
கிட்டிப் புள்ளி ஆடுவதில்
கிருஷ்ணன் நல்ல கெட்டிக்காரன்.

பந்து வீசிப் போடுவதில்
பரம சிவனே கெட்டிக்காரன்.
முந்திக் கோலி ஆட்டத்தில்
முருகன் நல்ல கெட்டிக்காரன்.










பாண்டி ஆட்டம் ஆடுவதில்
பார்த்த சாரதி கெட்டிக்காரன்.
தாண்டும் கிளித்தட் டாடுவதில்
தங்க வேலு கெட்டிக்காரன்.

பாய்ந்து நீளத் தாவுவதில்
பக்த வச்சலம் கெட்டிக்காரன்.
நீந்த வேலன் கெட்டிக்காரன்.
நீ எதிலே கெட்டிக்காரன்?

—ஜோதி மாமா





### பயிற்சி

1. நடிப்புடன் இந்தப் பாடல்களைப் பாடுவதற்குப் பழகிக் கொள்ளுங்கள்.
2. இந்தப் பாடத்தில் வந்துள்ள விளையாட்டுக்களில் உனக்கு மிகவும் இஷ்டமானது எது?
3. ஒவ்வோர் ஆட்டத்தின் முதல் எழுத்தையும் அதில் கெட்டிக்காரனாக இருக்கிறவன் பெயரின் முதல் எழுத்தையும் கவனியுங்கள். அவை எப்படி இருக்கின்றன? நீங்கள் விளையாட்டைப்பற்றியதில் என்ன வேறுபாடு காண்கிறாய்?

---

## 7. காற்றாடி

இந்தப் படத்தில் இருப்பவர்கள் முருகனும் வள்ளியும். அவர்கள் காற்றாடி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். முருகன் கையில் இருப்பது பனை



ஓலையினால் செய்யப்பட்டது. வள்ளி காகிதக் காற்றாடி வைத்திருக்கிறாள்.

காற்றுக்கு எதிரே நீட்டினால் காற்றாடி கரகர வென்று சுற்றும். காற்றாடி செய்ய நீ பழகிக்கொள். அது செய்ய என்ன என்ன பொருள் வேண்டும்?

பட்டம் என்பது காற்றில் பறக்கவிட்டு விளையாடும் மற்றொரு பொருள். ஒருவன் பட்டம் விடுகிறதைப் படத்தில் பார். அதற்கு ஒரு வால் இருக்கிறது. ஒரு நூலினால் அது கட்டப்பட்டிருக்கிறது.



சில ஊர்களில் பட்டத்தைக் காற்றாடி என்பார்கள்.

உங்களுக்கு விளையாட்டும் வேண்டும்; படிப்பும் வேண்டும். படிக்கும் நேரத்தில் படிக்க வேண்டும்; விளையாடும் நேரத்தில் விளையாட வேண்டும்.

### கேள்விகள்

1. முருகன் கையில் இருப்பது என்ன? வள்ளியின் கையில் இருப்பது என்ன?
2. பட்டம் செய்ய என்ன என்ன பொருள்கள் வேண்டும்?
3. எப்பொழுது விளையாட வேண்டும்?

### பயிற்சி

1. காற்றாடி என்ற பெயர் ஏன் வந்தது?
2. பனைபோலையின் வேறு உபயோகங்கள் எவை?
3. விளையாட்டுப் பொருள்களில் ஐந்தின் பெயர்களை எழுது.

# 8. பருத்தியும் ஆடையும்

இது பருத்திச் செடி. செடி விதையிலிருந்து உண்டாகிறது. செடியில் பூவும் காயும் தோன்றும்.





காய் வெடித்துப் பருத்தி வரும். கொட்டை எடுத்த பருத்தி பஞ்சு எனப்படும்.

பஞ்சை நூற்று நூலுக்குச் சாயம் ஏற்றுவார்கள்.





நூலில் துணி நெய்கிறார்கள். நூல் நூற்பதற்குக் கை ராட்டைகளும் இயந்திரங்களும் இருக்கின்றன.

ஆடை நெய்வதற்குக் கைத் தறிகளும் இயந்திரங்களும் இருக்கின்றன.

இந்தியாவில் பருத்தி மிகுதியாக விளைகிறது. இங்கே துணிகள் ஏராளமாக உண்டாகின்றன.



கடையில் வித விதமான துணிகளைப் பாருங்கள்.

### கேள்விகள்

1. பருத்தி எது? பஞ்சு எது?
2. நீ எந்த உடைக்காக ஜவுளிக் கடையில் துணி வாங்குகிறாய்? அம்மா எந்த எந்த உடைக்காகத் துணி வாங்கக் கூடும்?

### பயிற்சி

1. பருத்திக்கொட்டையின் உபயோகம் என்ன?
2. இயந்திரம்-தறி-இவற்றின் வேறுபாடு யாது?
3. கதர்த்துணி எப்படி உண்டாகிறது?
4. துணி விற்கும் கடையின் பெயர் என்ன?

---

## 9. உபகாரம் வீண் போகாது

ஒரு வியாபாரி காட்டின் வழியே போய்க் கொண்டிருந்தான். ஒரு மரத்தின் கீழே குரங்கு ஒன்று இருந்தது. அது பசியால் மெலிந்து கிடந்தது.



வியாபாரி குரங்கை எடுத்துத் தடவிக் கொடுத்தான். தன்னிடம் இருந்த உணவை அதற்குக் கொடுத்தான். குரங்கு பசி நீங்கிக் குணம் அடைந்தது. வியாபாரியின் மேல் அதற்கு அன்பு தோன்றியது. வியாபாரி செல்லும்போது அது கண்ணீர் விட்டு அழுதது.

வியாபாரியும் குரங்கை மறக்கவில்லை. "மறுபடியும் அதை எப்பொழுது பார்க்கப்போகிறோம்?" என்று அவன் வருத்தப்பட்டுக்கொண்டே சென்றான்.



வேறு ஒரு நாள் வியாபாரி அந்தப் பக்கம் வந்தான். குரங்கைப் பார்த்து மகிழ்ச்சி கொண்டான். வெயில் அதிகமாக இருந்தது. அவன் ஒரு மர நிழலில் படுத்துத் தூங்கினான். அந்தச் சமயம் குரங்கு அவன் அருகில் இருந்தது.

அப்பொழுது ஒரு பாம்பு வியாபாரியைக் கடிக்க வந்தது. குரங்கு அதைக் கண்டவுடன் ஒரு



தடியை எடுத்துப் பாம்பை அடித்துக் கொன்றது. வியாபாரி உயிர் தப்பிப் பிழைத்தான்.

முன்பு வியாபாரி குரங்கைக் காப்பாற்றினன். குரங்கு இப்பொழுது வியாபாரியைக் காப்பாற்றியது.

### கேள்விகள்

1. குரங்குக்கு வியாபாரியின்மேல் அன்பு தோன்றக் காரணம் என்ன?
2. அந்த அன்பை முதலில் குரங்கு எப்படிக் காட்டிற்று?
3. வேறு ஒரு நாள் குரங்கு செய்த உபகாரம் என்ன?

### பயிற்சி

1. வியாபாரி என்பவன் யார்?
2. தொழிலினுல் வரும் இரண்டு பெயர்களைக் கூறுக.
3. உபகாரம் வீண் போகாது என்று இந்தக் கதையினுல் எப்படி அறிகிருேம்?
4. வேறு வார்த்தைகளைக் கூறு: போய்க்கொண் டிருந்தான், கீழே, நாள், அருகில்.
5. உபகாரம்-பிரதி உபகாரம்; வேறுபாடு என்ன?



# 10. சந்தை

சிறு கிராமங்களில் கடைகள் இல்லை. அங்கே உள்ளவர்கள் வாரத்துக்கு ஒரு முறை சந்தைக்குப் போய் அங்கே தமக்கு வேண்டிய பொருள்களை வாங்குவார்கள். கிராமத்தில் விளையும் தானியங்கள், காய்கறிகள், பழங்சள் முதலியவற்றைச் சிலர் விற்பதற்கு வருவார்கள். பொருள்களை விற்கவும் வாங்கவும் வாரத்தில் ஒரு நாள் பலர் கூடும் இடம் சந்தை எனப்படும்.

கிராமத்தாருக்கு அவசியமான உப்பு, மண் எண்ணெய், தீப்பெட்டி, கடுகு, மிளகு, சீரகம், கொத்துமல்லி, துணிகள் முதலியன சந்தையில் விற்க வரும். ஆடு மாடுசள், கோழிகள், தோல் முதலியவையும் அங்கே விற்கும்.

நீங்கள் ஒரு சந்தைக்குச் சென்று வாருங்கள். அங்கே வியாபாரம் எப்படி நடக்கிறது என்று பாருங்கள்.

## கேள்விகள்

1. சந்தை என்பது யாது?
2. கிராமத்தார் அங்கே விற்கும் பொருள்கள் எவை? வாங்கும் பொருள்கள் எவை?

## பயிற்சி

1. சிறிய கிராமத்துக்கும் பெரிய கிராமத்துக்கும் வேறுபாடு என்ன?
2. நகரங்களில் உள்ளவர்கள் காய்கறிகளை எங்கே வாங்குகிருர்கள்?
3. ஒவ்வொரு கிழமை ஓர் ஊரில் சந்தை இருக்கும். ஒவ்வொரு கிழமையில் சந்தை கூடும் ஊர்களைச் சொல்லு.
4. எதிர்ப்பதங்களைக் கூறு: விற்றல், பகல், சிலர், கிராமம்.



## 11. ஆனை ஆனை

ஆனை ஆனை அழகர் ஆனை
அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை
முட்டிக் கரும்பை முறிக்கும் ஆனை
எட்டித் தேங்காய் பறிக்கும் ஆனை
காட்டுக் கரும்பை முறிக்கும் ஆனை
காவேரித் தண்ணீரைக் கலக்கும் ஆனை
செல்லக் கரும்பைப் பறிக்கும் ஆனை
தெருவெல்லாம் சுற்றி ஓடும் ஆனை
குட்டி ஆனைக்குக் கொம்பு முளைச்சுதாம்
பட்டணமெல்லாம் பறந்தோடிப் போச்சாம்.



## 12. புகைவண்டி

குழந்தைகளே! நீங்கள் ரெயில் வண்டியைப் பார்த்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். அது தண்டவாளங்களின் மீது ஓடும். முதலில் ஓர் இஞ்சின் இருக்கும். அதுதான் வண்டியை இழுத்துச் செல்கிறது. இஞ்சின் நீராவியினுல் ஓடுகிறது. இஞ்சினுக்கு நிலக்கரியும் தண்ணீரும் அவசியம். இஞ்சின் புகையைக் கக்கிக்கொண்டு செல்வதனுல் ரெயில் வண்டியை நாம் புகை வண்டி என்கிறோம்.

இஞ்சினுக்குப் பின் பல பெட்டிகள் ஒன்றன் பின் ஒன்ருகச் சங்கிலியால் இணைக்கப்பட்டிருக்கின்றன. பிரயாணிகள் உட்காருவதற்கு வசதியாகப் பெட்டிகளில் பெஞ்சுகள் காணப்படுகின்றன. சாமான்களை வைப்பதற்கு மேலே பலகைகள் இருக்கின்றன. பெஞ்சுகளின் அடியிலும் சாமான்களை வைக்கலாம்.

பெட்டிகளில் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, நடுத்தர வகுப்பு, மூன்ரும் வகுப்பு என நான்கு வகைகள் உண்டு. மூன்ரும் வகுப்பைவிட

மற்றவற்றில் வசதிகள் அதிகம். அதனால் அவைகளில் பிரயாணம் செய்வோர் வசதிகளுக்கு ஏற்றாற்போல், வகுப்புக்குத் தகுந்தபடி அதிகக் கட்டணம் செலுத்த வேண்டும்.

இங்கிலாந்தில் ஜேம்ஸ் வாட் என்ற பையன் ஒருவன் இருந்தான். ஒரு நாள் அவன் அடுப்பண்டை உட்கார்ந்திருந்தான். ஒரு கிட்டிலில் ஜலம் கொதித்துக்கொண் டிருந்தது. கிட்டிலின் மூக்கின் வழியாக நீராவி புஸ் புஸ் என்று வெளி வருவதைப் பையன் பார்த்தான். பிறகு அவன் ஒரு தட்டுக் குச்சியை எடுத்துக் கிட்டிலின் மூக்கின் துவாரத்தை அடைத்தான். தட்டைத் தூக்கி எறிந்துவிட்டு நீராவி வெளிவந்தது. அப்பொழுது அவன் நீராவிக்கு மிகுந்த பலம் இருப்பதை அறிந்துகொண்டான். அவன் பல சோதனைகள் செய்து நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்தான். புகை வண்டியைக் கண்டறிந்த பெருமை ஜேம்ஸ் வாட்டுக்கு உரியதாகும்.

### கேள்விகள்

1. புகை வண்டி என்ற பெயர் எதனால் வந்தது?
2. இஞ்சினில் நீராவி உண்டாக என்ன என்ன பொருள்கள் அவசியம்?
3. பெட்டியில் சாமான்களை எங்கே வைக்கிறார்கள்?
4. நீராவிக்குப் பலம் இருப்பதை ஜேம்ஸ் எப்படி அறிந்தான்?

### பயிற்சி

1. நீங்கள் புகை வண்டி விளையாட்டை அறிந்துகொண்டு ஆடுங்கள்.
2. முதல் இரண்டு வகுப்புப் பெட்டிகளில் என்ன என்ன வசதிகள் இருக்கும் என்று தெரிந்துகொள்ளுங்கள்.
3. கட்டணம், ஏற்றாற்போல் - இவைகளை வாக்கியத்தில் அமைக்க.
4. தண்டவாளத்தில் ஓடும் வேறு வண்டி எது?



## 13. சந்திரன்

சூரியன் பகலில் பிரகாசிக்கிருன்; சந்திரன் இரவில் வெளிச்சம் தருகிருன். சூரியன் வெப்பத்தைத் தருகிருன்; சந்திரன் குளிர்ச்சியைத் தருகிருன். பகலவன் என்றும் வட்டமாகக் காணப்படுகிருன்; சந்திரன் எல்லா நாளும் வட்டமாக இருப்பதில்லை.

வட்டமாக இருக்கும்போது சந்திரனுக்கு மதி என்று பெயர். மதி ஒவ்வொரு நாளும் தேய்ந்துவரும். கடைசியில் ஒரு கோடுபோல் தேய்ந்து மறைந்துவிடும். குறைச் சந்திரனைப் **பிறை** என்பார்கள். தேய்ந்துபோன பிறை மறுபடியும் வளர்ந்து முழு மதி ஆகும். இப்படி ஒவ்வொரு

மாதமும் சந்திரன் பாதிநாள் தேய்வதையும் பாதி நாள் வளர்வதையும் நாம் காணலாம்.

**தேய்பிறை** பதினைந்து நாள். **வளர்பிறை** பதினைந்து நாள். சந்திரன் தேய்ந்து கண்ணுக்குப் புலப்படாத நாளை **மறைமதி** அல்லது **அமாவாசை** என்பார்கள். சந்திரன் முழு மதியாக விளங்கும் நாளை **நிறைமதி** அல்லது **பௌர்ணமி** என்பார்கள்.

சந்திரனுக்கு **நிலா** என்ற பெயரும் உண்டு. தாய், நிலாவைக் காட்டிக் குழந்தையைச் சந்தோஷப் படுத்துவாள். நிலா இருக்கும்போது எல்லோரும் வெளியே வந்து மகிழ்ச்சியுடன் பொழுது போக்கு வார்கள்.

**கேள்விகள்**

1. சூரியனுக்கும் சந்திரனுக்கும் பேதம் என்ன?
2. சந்திரனுக்கு எப்பொழுது மதி என்று பெயர்? எப்பொழுது பிறை என்று பெயர்?
3. அமாவாசை, பௌர்ணமி என்ற சொற்களுக்கு வேறு பெயர் கூறுக.

---

## 14. படமும் பழமொழியும்



குரைக்கும் நாய் கடிக்காது.



காக்கைக்குத் தன் குஞ்சு பொன்குஞ்சு.



காற்றுள்ள போதே
தூற்றிக்கொள்.



கரும்பு தின்னக்
கூலி வேண்டுமா?



பனங்காட்டு நரி
சலசலப்புக்கு
அஞ்சாது.



உயர உயரப் பறந்தாலும்
ஊர்க்குருவி
கருடன் ஆகுமா?

## பயிற்சி

படங்களுக்கு ஏற்ற சில பழமொழிகளைத் தேர்ந்தெடுத்து அவைகளை இந்தப் பாடத்திற் கண்டபடி படங்களின்கீழ் எழுதி வைத்துக்கொள்ளும்படி ஆசிரியர் பிள்ளைகளுக்கு யோசனை கூறவேண்டும்.



## 15. நிலாவோடு சம்பாஷணை

நிலா! நிலா! எங்கே போனாய்?
மலையாங்குளத்துக்கு மண் எடுக்கப் போனேன்.
மண் எதற்கு? உழக்குச் செய்ய.
உழக்கு எதற்கு? பணம் போட.
பணம் எதற்கு? மாடு வாங்க.
மாடு எதற்கு? சாணி போட.
சாணி எதற்கு? வீடு மெழுக.
வீடு எதற்கு? பிள்ளை பிறக்க.
பிள்ளை எதற்கு? ஓலைப்பாயில் ஓடி விளையாட;
ஈச்சம்பாயில் இருந்து விளையாட;
கோரைப்பாயில் குலவி விளையாட.



## 16. தென்னுலி ராமன்

தெலுங்கு நாட்டில் தென்னுலி என்ற ஓர் ஊர் இருக்கிறது. ஒரு காலத்தில் அந்த ஊரில் இராம கிருஷ்ணன் என்ற விகடகவி ஒருவன் இருந்தான். விகடமாகப் பேசுவதிலும் நடிப்பதிலும் அவன் சமர்த்தன். அதனுல் கிருஷ்ணதேவ ராயர் என்ற அரசர் அவனே அழைத்து வந்து தம் சம்ஸ்தானத்தில் வைத்துக்கொண்டார்.

ஒரு நாள் கிருஷ்ணதேவ ராயர் கோபத்தோடு இருந்தார். அந்தச் சமயம் தென்னுலி ராமன் அங்கே வந்து விகடமாகப் பேசினுன். இராயருக்குக் கோபம் அதிகமாயிற்று. அதனுல் அவர், "இராம கிருஷ்ணு! இனிமேல் நீ என் முன் தலேகாட்டாதே"

என்று கட்டளை இட்டார். தென்னாலி ராமன் உடனே வெளியே சென்றுவிட்டான்.

மற்றொரு நாள் கிருஷ்ணதேவ ராயருக்குத் தென்னாலி ராமனைப் பார்க்கவேண்டும் என்று ஆசை ஏற்பட்டது. அவர் சபையில் இருந்துகொண்டு தென்னாலி ராமனுக்கு ஆள் அனுப்பினார். பிறகு தென்னாலி ராமன் தன் தலையில் ஒரு பானையை மாட்டிக்கொண்டு சபைக்கு வந்தான்.

"இராமகிருஷ்ணா! இது என்ன விகடம்! சபைக்குள் இந்தக் கோலத்துடன் வரலாமா?" என்று இராயர் கேட்டார்.

அதற்குத் தென்னாலி ராமன், "மகாராஜாவே! 'இனிமேல் நீ என்முன் தலைகாட்டாதே' என்று அன்று நீங்கள் கூறினீர்கள். அதனால்தான் நான் என் தலையை மறைத்து வந்தேன்" என்றான்.

எல்லோரும் அவனுடைய விகடத்தை மெச்சினார்கள். இராயர் அவனுடைய சாதுரியத்துக்குச் சிறந்த சம்மானம் செய்தார்.

தென்னாலி ராமன் கதைகளில் சிலவற்றை நீங்கள் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள்.

### கேள்விகள்

1. தென்னாலி ராமன் என்ற பெயர் எப்படி வந்தது?
2. தென்னாலி ராமன் விகடமாகப் பேசியது ஒரு தடவை இராயருக்கு ஏன் பிடிக்கவில்லை?
3. இந்தக் கதையில் தென்னாலி ராமன் செய்த விகடம் யாது?

### பயிற்சி

1. விகடகவி என்பவர் யார்?
2. விகடகவி என்ற பெயரைத் தலைகீழாகப் படி.
3. ராஜா என்ற அர்த்தத்தில் வரும் வேறு இரண்டு சொற்களைச் சொல்லு.
4. 'என் முன் தலை காட்டாதே' என்றால் என்ன அர்த்தம்?



## 17. கோழிகள்

தாயார்: தம்பி! இந்தக் கோழிகளைப் பார் இவைகளில் அழகாக இருப்பது எது?

முருகன்: அம்மா! தலையில் பெரிய கொண்டை யும் வளைந்த வால் இறகுகளும் உள்ள கோழிதான் அழகாக இருக்கிறது.

தாயார்: நீ கெட்டிக்காரன். அதுதான் அழகு. அது ஆண் கோழி. ஆண் கோழியைச் சேவல் என் பார்கள். பெண் கோழியைப் **பெட்டைக் கோழி** என்பார்கள்.

முருகன்: அம்மா! அந்தப் பெட்டைக் கோழி யின் அன்பைப் பாருங்கள்! ஆகாரத்தை அது தின்னவில்லை; தன் குஞ்சுகளைத் தின்னும்படி விடு கிறது!

தாயார்: நீ நன்ருகக் கவனிக்கிருய். ஆகாரம் தின்ன அது குஞ்சுகளுக்குப் பழக்கித் தருகிறது.

**முருகன்:** முட்டையில் இருந்துதானே, அம்மா! குஞ்சு உண்டாகிறது?

**தாயார்:** பெட்டைக்கோழி முட்டை இடுகிறது. பத்துப் பன்னிரண்டு முட்டைகளை ஒரு கோழி அடை காக்கிறது. இருபத்தொரு நாள் அடை காத்தபின் குஞ்சுகள் வெளியே வருகின்றன.

**முருகன்:** அடைகாத்தல் என்றால் என்ன, அம்மா?

**தாயார்:** முட்டைகளை ஒரு கூட்டில் வைப்பார்கள். பெட்டைக்கோழி அந்த முட்டைகளின் மேலே உட்கார்ந்திருக்கும். அது உட்காருவதனால் சூடு ஏற்படுகிறது. சூடு ஏற ஏற, குஞ்சு பெரியதாகி முட்டையை உடைத்துக்கொண்டு வருகிறது. முட்டைகளின்மேல் கோழி உட்காருவதைத்தான் அடைகாக்கிறது என்கிறோம்.

## கேள்விகள்

1. கோழிகளில் சேவலை நீ எப்படி அடையாளம் தெரிந்து கொள்ளுவாய்?
2. பெட்டைக் கோழியின் அன்பு எதனால் வெளியாகிறது?
3. அடைகாப்பு என்றால் என்ன?

## பயிற்சி

1. பின்வரும் பிராணிகளில் ஆணின் பெயர் என்ன? பெண்ணின் பெயர் என்ன? கோழி, மாடு.
2. பத்துப் பன்னிரண்டு—இந்த மாதிரி சேர்த்து எண்ணும் சிலவற்றைச் சொல்லு.
3. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை அமைக்க: (i)———முட்டைகளை அடைகாக்கிறது. (ii) விதை எடுத்த பருத்தி———எனப்படும். (iii) சந்தை வாரத்தில் ஒரு நாள்———(iv) புகைவண்டி———மேல் ஓடுகிறது. (v) பூர்ண சந்திரனை——என்பார்கள்.

———

# 18. பருவங்கள்



சித்திரையும் வைகாசியும்
இளவேனிற் காலம்.



ஆனியும் ஆடியும்
முதுவேனிற் காலம்.



ஆவணியும் புரட்டாசியும்
மழைக் காலம்.



ஐப்பசியும் கார்த்திகையும்
குளிர் காலம்.



மார்கழியும் தையும்
முன்பனிக் காலம்.



மாசியும் பங்குனியும்
பின்பனிக் காலம்.

இவை ஆறும் பருவங்கள் எனப்படும்.

**பயிற்சி**

ஒவ்வொரு பருவ காலத்திலும் என்ன விசேஷம் என்று படத்தைப் பார்த்துச் சொல்லு.

---

## 19. தீபாவளி

இந்தியா முழுவதும் கொண்டாடும் பண்டிகை தீபாவளி. இந்துக்கள் இதனை மேலாகக் கருதி வருகிறார்கள்.

தீபாவளி ஐப்பசி மாதம் அமாவாசைக்கு முதல் நாள் வருகிறது. அன்று விடியற்காலையில் எல்லோரும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பார்கள். புதிய ஆடைகளை உடுத்துக்கொள்ளுவார்கள். பிறகு ஒருவரை ஒருவர் சந்தித்து, "கங்கா ஸ்நானம் ஆயிற்றா?" என்று கேட்பார்கள். தங்கள் வீட்டுக்கு வருகிறவர்களுக்கு எல்லாம் வெற்றிலை பாக்கு, சந்தனம் முதலியவற்றை வழங்குவார்கள்.

சிறுவர்கள் பட்டாசு, மத்தாப்பு முதலியவற்றால் மகிழ்ச்சி அடைவார்கள்.

வீட்டில் விதவிதமான பலகாரங்களைச் செய்வார்கள். பெண் வீட்டார் தீபாவளிப் பண்டிகைக்கு மாப்பிள்ளையை அழைப்பது வழக்கம். வேலைக்காரருக்கு அப்பொழுது பல பரிசுகள் கிடைக்கும்.

இந்தப் பண்டிகையைக் கொண்டாடுவதற்கு ஒரு கதை வழங்குகிறது.

நரகாசுரன் என்று கொடிய அசுரன் ஒருவன் இருந்தான். அவன் உலகத்தில் உள்ளவர்களையும் தேவர்களையும் துன்புறுத்தி வந்தான். எல்லோரும் கிருஷ்ணபகவானிடம் சென்று முறையிட்டார்கள். கிருஷ்ணர் அவர்களுக்கு அபயம் கொடுத்து நரகாசுரனைக் கொல்லத் தீர்மானித்தார்.

பிறகு இருவருக்கும் போர் மூண்டது. நரகாசுரன் மாயம் செய்து இருளை உண்டாக்கினான். கண்ணபிரான் பிரகாசமான அம்புகளைப் போட்டு இருளை ஒழித்தார். கடைசியில் நரகன் கீழே சாய்ந்தான். அவன் இறக்கும்போது புத்தி வந்து



கிருஷ்ணபகவானைத் துதித்தான். தான் இறந்து போன நாளை மக்கள் கொண்டாடவேண்டுமென்று வேண்டினான். அந்தத் தினத்தில் எண்ணெய் தேய்த்துக் குளிப்பவருக்குக் கங்கையில் ஸ்நானம்

செய்த பலனைத் தருவதாகக் கண்ணபிரான் வாக்களித்தார். தீபாவளிப் பண்டிகை பிறந்த வரலாறு இது.

### கேள்விகள்

1. தீபாவளி என்று வரும்?
2. தீபாவளியன்று நடக்கும் விசேஷங்கள் எவை?
3. கண்ணபிரான் நரகாசுரனை ஏன் கொன்றார்?
4. நரகாசுரன் வேண்டிக்கொண்ட வரம் யாது?

### பயிற்சி

1. இந்துக்கள்—ஒரு மதத்தினர். இந்த மாதிரி சில மதத்தாரின் பெயரைச் சொல்லு.
2. பொருள் கூறுக: வழங்குவார்கள், விடியல் நேரம், பக்ஷணங்கள், பரிசுகள்.
3. வாக்கியத்தில் அமைக்க: விதவிதமான, கொண்டாடு, [illegible], வற்புறுத்தி, அபயம்.

---



## 20. தீபாவளிப் பாட்டு.

காதைத் துளைக்குது வெடி ஓசை;—இரு
கண்ணைப் பறிக்குது ஜோதி எல்லாம்
பாதை வெளிவீடு எங்கும் புகை புகை!
பார்க்கும் இடமெல்லாம் மகிழ்ச்சி யம்மா!



நாவுக்கு ருசியான பலகாரம்;—எந்த
நாளும்இல் லாதபல் பக்ஷணங்கள்
பூவுக்கும் வெற்றிலை பாக்குக்கும் பலமக்கள்
பூரிக்கும் காட்சியை என்ன சொல்வேன்!



எண்ணெய்தேய்த் துக்குளித் தேவிடி யல்நேரம்
எத்தனை வகையான புதியஉடை!
கண்ணைக் கவரும் விதம்உடுத் தேயாரும்
களித்திடு வார்இன்று தீவளியாம்!

—ச. கு. க.

———

# 21. பிறந்த நாள்

**பை**யன் வீட்டுக்கு வந்தான். "அப்பா! நாளைக்கு ஸ்ரீஜயந்தியாம். அதனால் பள்ளிக்கூடம் இல்லையாம். ஸ்ரீஜயந்தி என்றால் என்ன, அப்பா?" என்று அவன் கேட்டான்.

தந்தை: கிருஷ்ண பகவான் பிறந்த நாளை ஸ்ரீஜயந்தி என்கிறார்கள்.

மகன்: கிருஷ்ணர் பிறந்த நாளானால் எங்களுக்கு விடுமுறை எதற்கு, அப்பா?

தந்தை: கிருஷ்ணர் பிறந்த நாளில் கோவிலிலும் வீட்டிலும் கண்ணனுக்குப் பூஜைகள் நடக்கும். எல்லோரும் கிருஷ்ணரை நினைத்துக்கொண்டு சந்தோஷமாக இருக்க வேண்டும் என்று விடுமுறை ஏற்பட்டிருக்கிறது. அன்று வீடுகளில் பக்ஷணங்கள் செய்வார்கள்.



மகன்: என் பிறந்த நாள் அன்றும் பள்ளிக்கூடம் இராதா, அப்பா?

தந்தை: ஒருவன் பிறந்த நாளுக்காகப் பள்ளிக்கூடம் மூடமாட்டார்கள். நீ அன்று ரஜா வாங்கிக்கொள்ளலாம்.

மகன்: கிருஷ்ணரும் ஒருவர்தாமே! அவருடைய பிறந்த நாளுக்கு விடுமுறை கிடைக்கிறதே!

**தந்தை:** கிருஷ்ணர் கடவுளின் அவதாரம் ஆதலால் இந்துக்கள் எல்லாரும் அவர் பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்கள். உலகில் புகழ்பெற்ற பெரியோரின் பிறந்த நாளையும் கொண்டாடுவதுண்டு. உன் பிறந்த நாளை நம் வீட்டில்மட்டும் கொண்டாடுவோம்.

**மகன்:** அப்படியானால் என் பிறந்த நாளை எப்படி அப்பா, கொண்டாடுவீர்கள்?

**தந்தை:** நம் வீட்டில் பக்ஷணங்கள் பண்ணுவோம். உனக்கு எண்ணெய் தேய்த்துக் குளிப்பாட்டிப் புதிய ஆடைகளைத் தருவோம். நாம் கோவிலுக்குப் போவோம். அன்று முழுவதும் எல்லோரும் சந்தோஷமாக இருப்போம்.

**மகன்:** அப்படியானால் தினமும் பிறந்த நாளாக இருப்பது நல்லது அல்லவா?

**தந்தை:** அது எப்படி முடியும்? வருஷத்துக்கு ஒரு தடவைதான் பிறந்த நாள் வரும். சரி, இது விளையாடும் நேரம். ஏதேனும் சிற்றுண்டி சாப்பிட்டு விட்டு விளையாடப் போ.

**மகன்:** நல்லது, அப்பா! நான் இன்று எத்தனையோ விஷயம் தெரிந்துகொண்டேன்.

### கேள்விகள்

1. ஸ்ரீஜயந்தி அன்று என்ன என்ன செய்கிறார்கள்?
2. தினமும் பிறந்த நாள் இருப்பது நல்லது என்று பையன் ஏன் சொன்னான்?

### பயிற்சி

1. ஸ்ரீஜயந்திபோல் வேறு எந்தக் கடவுளுக்குப் பிறந்த நாளைக் கொண்டாடுகிறோம்?
2. உன் பிறந்த நாளை எப்படிக் கொண்டாடுகிறார்கள்?

---

## 22. உயிர் வகைகள்

உலகத்தில் எத்தனையோ ஜீவராசிகள் இருக்கின்றன. அவைகளை ஆறு பிரிவுகளாகக் கூறுவார்கள்.



மரம், செடி, கொடி, புல், பூண்டு ஒருவகை. இவை நடமாடக்கூடிய உயிர்கள் அல்ல. அதனால் **தாவரங்கள்** எனப்படும்.

நீரில் வாழும் ஜந்துக்கள் இரண்டாம் வகை. இவை **நீர் வாழ்வன** எனப்படும்.



ஊர்ந்து செல்லும் பிராணிகள் மூன்றாம் வகை. இவை **ஊர்வன** எனப்படும்.

பறக்கும் பறவைகள் நாலாம் வகை. இவை **பறப்பன** எனப்படும்.

நடந்து செல்லும் பிராணிகள் ஐந்தாம் வகை. இவை **நடப்பன** எனப்படும்.



மனிதர் ஆறும் வகை. மற்ற உயிர்களுக்கு இல்லாத பகுத்தறிவு மனிதனுக்குத்தான் உண்டு. அதனால், எல்லாப் பிராணிகளிலும் மனிதனே மேலானவன்.







மேலான பிறவி கிடைத்திருப்பதனுல் நாம் நல்லவர்களாக நடந்துகொள்ள வேண்டும்.

**கேள்விகள்**

1. உயிர்களில் ஆறு வகைகள் எவை?
2. நடப்பன—ஊர்வன—இவை இரண்டுக்கும் வித்தியாசம் என்ன?
3. எல்லா உயிர்களிலும் மனிதன் எப்படி மேலானவன்?
4. நாம் ஏன் நல்லவர்களாக நடந்துகொள்ள வேண்டும்?

**பயிற்சி**

1. தாவரங்களை எப்படி உயிருள்ளவை என்று சொல்லலாம்?
2. மரம், செடி, கொடி, நீரில் வாழ்வது, ஊர்வது—இவைகளுக்கு ஒவ்வோர் உதாரணம் கொடு.

---

## 23. பாப்பாவும் பிராணிகளும்

சின்னஞ் சிறுகுருவி போலே—நீ
திரிந்து பறந்து வா, பாப்பா!
வண்ணப் பறவைகளைக் கண்டு—நீ
மனதில் மகிழ்ச்சிகொள்ளு, பாப்பா! (1)

கொத்தித் திரியும் அந்தக் கோழி—அதைக்
கூட்டி விளையாடு, பாப்பா!
எத்தித் திருடுமந்தக் காக்காய்—அதற்கு
இரக்கப் படவேணும், பாப்பா! (2)

பாலைப் பொழிந்துதரும், பாப்பா!—அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!
வாலைக் குழைத்துவரும் நாய்தான்—அது
மனிதர்க்குத் தோழனடி; பாப்பா! (3)

வண்டி இழுக்கும் நல்ல குதிரை;—நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு;
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு;—இவை
ஆதரிக்க வேணுமடி, பாப்பா! (4)

—பாரதியார்

## 24. கால் போனால் என்ன ஆகும்?

எந்த எந்த எழுத்துச்குக் கால் உண்டு? கா, கொ, கோ இவை மூன்றுச்கும் கால் இருக்கிறது. கீழே வரும் தொடர்களில் கோடு போட்டுள்ள இடத்தில் பொருத்தமான ஒரு சொல்லை எழுதுங்கள்.

1. காலுக்குக் கால் போனால் கடினமுள்ள ——ஆகும்.
2. பாலுச்குக் கால் போனால் வாயிலுள்ள ——ஆகும்.
3. தோளுக்குக் கால் முறியத் துன்புதரு—— ஆகும்.
4. சொல்லுக்குக் கால் போனால் தொல்லை மிகு ——ஆகும்.

### பயிற்சி

1. ஆட்டுக்குக் கால் இல்லை என்பார்கள்—இது சரியா?
2. கோழிக்குக் கொம்பு உண்டு என்பார்கள்—இது எப்படி?

---

## 25. இரட்டைச் சொற்கள்

1. தண்ணீர் சலசலவென்று ஓடுகிறது.
2. பொழுது பலபலவென்று விடிந்தது.
3. முருகன் கலகலவென்று சிரித்தான்.
4. குதிரை திடுதிடுவென்று நடக்கிறது.
5. அவன் திருதிருவென்று விழிக்கிறான்.
6. சீதா படபடவென்று பேசுகிறாள்.
7. வள்ளி பரபரவென்று வேலை செய்கிறாள்.
8. தீ தகதகவென்று எரிகிறது.
9. நெஞ்சு படபடவென்று அடிக்கிறது.
10. அவன் மடமடவென்று நீர் குடிக்கிறான்.



## 26. தாயக் கட்டம்

**ப**டத்தில் உள்ளது தாயக் கட்டம். சிலர் இதைத் தாயக் கறம் என்பார்கள். ஆறு சோழி களை வைத்துக்கொண்டு விளையாடும் ஆட்டம் இது. ஒவ்வொருவரும் ஆறு காய்களை வைத்துக்கொள்ள வேண்டும். நான்கு பேர் வரையில் கட்டம் ஆடு வார்கள்.

சோழிகள் ஆறையும் உருட்டுவார்கள். ஒன்று மாத்திரம் நிமிர்ந்து விழுந்தால் அதற்குத் தாயம் என்று பெயர். இரண்டு நிமிர்ந்து விழுந்தால் இரண்டு. இப்படியே மூன்று, நான்கு, ஐந்து, ஆறு என்று கணக்கிட வேண்டும். ஆறும் குப்புற விழுந்தால் பன்னிரண்டு. ஒருவருக்குத் தாயம், ஐந்து ஆறு, பன்னிரண்டு விழுந்தால் மறு ஆட்டம் உண்டு.

தாயம் விழுந்தால்தான் காயை இறக்க முடியும். ஓர் எண்ணுக்கு ஒரு வீடு வீதம் காயை நகர்த்த வேண்டும். கட்டத்திலே குறுக்குக் கோடுகள் போட்டுள்ள நான்கு இடங்களைப் பார். அந்த இடங்களில் ஒருவர் காய் இருக்கும்போது மற்றொருவரின் காயைப் போடக்கூடாது. மற்ற வீடுகளில் ஒருவருடைய காய் இருக்கும்போது வேறொருவர் காய் வந்தால் முன்னே இருந்த காயை எடுத்துக் கறத்தின் நடுவில் வைத்துவிட வேண்டும். இதற்கு வெட்டு என்று பெயர்.

தாயக்கட்டம் உனக்குப் பிரியமான விளையாட்டு அல்லவா?

### கேள்விகள்

1. ஆறுக்கும் பன்னிரண்டுக்கும் தாயத்துக்கும் சோழிகள் எப்படி விழவேண்டும்?
2. காயை எப்பொழுது இறக்க முடியும்?
3. வெட்டு என்றால் என்ன?

### பயிற்சி

1. தாயக் கட்டத்தை விளையாடுவோர் சோழிகளுக்குப் பதிலாக வேறு எவைகளை வைத்து உருட்டுவார்கள்?
2. வாக்கியத்தில் அமைக்க: வீதம், வரையில், நிமிர்ந்து, குப்புற.
3. தாயக் கறம்போல் உள்ள வேறு விளையாட்டு எது?



## 27. காகிதக் கத்தரிப்பு

காகிதத்தை மடித்துக் கப்பல் செய்ய உங்களுக்குத் தெரியுமா? காகிதத்தில் வௌவால், பை, ஆகாய விமானம் முதலியவைகளையும் செய்யலாம்.

காகிதக் கொடிகளையும் தோரணங்களையும் நீங்கள் பார்த்திருக்கலாம். பல நிறமுள்ள காகிதங்களால் இவைகளைச் செய்கிறார்கள். செய்யும் விதத்தை நீங்கள் தெரிந்துகொள்ளுங்கள்.

காகிதங்களைக் கத்தரித்து மலர்கள், செடிகள், மாலைகள் முதலியவற்றையும் செய்யலாம். அப்படிச் செய்ய அதிகமான பழக்கம் வேண்டும்.

வழுவழுப்பான வர்ணக் காகிதம் ஒன்று இருக்கிறது. அதன் ஒரு புறம் வெள்ளை; மற்றொரு பக்கம் பச்சை, சிவப்பு, மஞ்சள், ஊதா, நீலம் முதலிய நிறங்களில் ஒன்றாக இருக்கும். அந்தக் காகிதத்தை வாங்குங்கள். வெள்ளையாக உள்ள பக்கத்தில் சதுரம், நீண்ட சதுரம், வட்டம், முக்கோணம், அறுகோணம், முதலிய வடிவங்களை எழுதுங்கள். பிறகு அவைகளைக் கத்தரித்து ஒரு



நோட்டுப் புத்தகத்தில் ஒட்டுங்கள். பழுப்புத் தாளி ஞல் செய்யப்பட்ட நோட்டுப் புத்தகம் ஒட்டுவதற்கு நல்லது.

காய்கள், பழங்கள், யானை, குதிரை முதலிய வடிவங்களையும் கத்தரித்து ஒட்டலாம். காகித வேலைகள் உங்களுக்கு மகிழ்ச்சி தரும் பொழுது போக்கு.

## பயிற்சி

1. காகிதங்களைக் கொண்டு சில பொருள்களைச் செய்யவும்.
2. வர்ணக் காகிதங்களைப் பல உருவங்களில் கத்தரிக்கவும்.
3. ஆசிரியர் பிள்ளைகளை உற்சாகப்படுத்தவேண்டும்.

---

# 28. காந்தி அடிகள்

காந்தி என்ற பெயரை நீங்கள் கேட்டிருப்பீர்கள். இவருடைய படத்தை எல்லோரும் பார்த்திருப்பீர்கள். உலகத்தில் பிறந்த பெரியார்களில் காந்தி ஒருவர். இவரை மகாத்மா என்றும் அடிகள் என்றும் அழைப்பார்கள்.



மகாத்மா காந்தி கூர்ஜரம் என்ற ராஜ்ஜியத்தில் பிறந்தவர். உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர். இங்கிலாந்துக்குப் போய், பெரிய சட்டப் பரீக்ஷையில் தேர்ந்து இந்தியா திரும்பினர். தென் ஆப்பிரிச்காவில் இந்தியர்களுக்காக அரும்பாடு பட்டார். 1920-ஆம் ஆண்டு முதல் இந்தியாவில் சேவை செய்துவந்தார்.

காந்தி அடிகள் உண்மையே பேசிவந்தார். உண்மைக்காகவே உழைத்து வந்தார். இவருடைய முயற்சியினால்தான் நமக்குச் சுயராஜ்யம் கிடைத்தது. கத்தி இன்றி, இரத்தம் சிந்தாமல், அஹிம்சா முறையில் சுதந்தரத்தை வாங்கிக் கொடுத்ததில் தான் இவர் பெருமை அதிசமாக விளங்குகிறது. மனிதர் எல்லோரும் வேறுபாடு இல்லாமல் ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்று காந்தி மகான் பாடு பட்டு வந்தார்.

இவருடைய உபதேசங்களை அறியாத ஒருவன் 30-1-1948-இல் வஞ்சனையாக வந்து இவரைச் சுட்டுக் கொன்றான்.

காந்தி அடிகள் பிறந்த நாள் அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி. ஜனவரி மாதம் 30-ஆம் தேதி

அவர் மரணம் அடைந்தார். இந்த இரண்டு தினங்களும் நமக்கு விடுமுறை நாட்கள்.

காந்தி காட்டிய வழியை எல்லோரும் பின் பற்றி நடக்கவேண்டும்.

### கேள்விகள்

1. காந்தியடிகள் இங்கிலாந்தில் கற்ற படிப்பு யாது?
2. அவர் முதலில் எங்கே சேவை செய்தார்?
3. காந்தியடிகளைப்பற்றி நினைப்பதற்கு உரிய இரண்டு தினங்கள் எவை?

### பயிற்சி

1. காந்தி அடிகளைப்பற்றிய வரலாறுகளில் சிலவற்றைக் கேட்டுத் தெரிந்துகொள்ளுக.
2. உலகப் பெரியார்களில் மூவரைக் கூறுக.

---

## 29. சுக வழி

1. சுத்தம் சோறு போடும்.
2. கூழானாலும் குளித்துக் குடி.
3. கந்தை ஆனாலும் கசக்கிக் கட்டு.
4. பசித்துப் புசி.
5. தூக்கம் கெட்டால் துக்க மிகும்.
6. உழைப்புக்கு ஏற்ற சுகம்.
7. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்.
8. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
9. அதிகாலையில் எழுந்திரு.
10. பல்லும் நகமும் தலையும் பழுதில்லாமல் பார்.



# 30. படம் பார்த்துப் படித்தல்

இது வீட்டுத் தோட்டம். நடுவில் வீடு இருக்கிறது. அது மாடி வீடு. வீட்டைச் சுற்றிலும் தோட்டம் காணப்படுகிறது.

வீட்டின் முன்புறம் இருப்பது **சிங்காரத் தோட்டம்**. அங்கே செடிகள் வரிசையாக நடப்பட்டிருக்கின்றன. அவைகளை ஒழுங்காகக் கத்தரித்திருக்கிறார்கள். பாதையின் இரண்டு பக்கத்திலும் சதுரமான **புல்வெளிகள்** இருக்கின்றன. புல்வெளியின் நடுவிடம் அழகாக அமைக்கப்பட்டிருக்கிறது.

வீட்டின் பக்கங்களிலும் பின்புறமும் **காய்கறித் தோட்டம்** காணப்படுகிறது. பந்தலில் கொடிகள் படர்ந்திருக்கின்றன. ஆறு பந்தல்கள் இருக்கின்றன. பாத்திகளில் சிறிய செடிகள் இருக்கின்றன.

சுவர்களின் ஓரங்களில் பழ மரங்களையும் தென்ன மரங்களையும் வைத்திருக்கிறார்கள். அவை அடுத் தடுத்து உள்ளன.

வீட்டின் பின்புறம் கொல்லையின் நடுவில் கிணறு இருக்கிறது. கிணற்றின் அருகில் இருப் பவை வாழை மரங்கள்.

வீடும் தோட்டமும் பார்வைக்கு அழகாக இருக் கின்றன.

---

## 31. மனிதனும் குரங்கும்

மணிவண்ணன் நல்ல பையன். அவன் ஒரு நாள் தன் அறையில் ஜன்னலுக்கு அருகில் நின்று கொண்டு சொக்காய் போட்டுக்கொண்டான். பிறகு கண்ணாடி பார்த்துத் தன் தலையை வாரிக்கொண் டான். அப்புறம் அவன் சீப்பையும் கண்ணாடியை யும் அங்கேயே வைத்து விட்டு வெளியே போய் விட்டான்.



ஜன்னலுக்கு வெளியே இருந்த மரத்தில் ஒரு குரங்கு இருந்தது. அந் தக் குரங்கு மணிவண்ண னின் செயல்களை எல்லாம் நன்றாகக் கவனித்து வந் தது. அவன் வெளியே போனபிறகு குரங்கு ஜன் னல் வழியாக அறைக் குள் நுழைந்தது.

அறையில் ஒரு புறம்

குழந்தையின் சொக்காய் ஒன்று கிடந்தது. குரங்கு அதைப் போட்டுக்கொண்டது. கண்ணாடியும் சீப்பும் எடுத்துக்கொண்டது. அது பிறகு தன் தலையை வாரிக் கொண்டது.



பிறகு குரங்கு கண்ணாடியைப் பார்த்து இளித்தது. கண்ணாடியில் தோன்றிய உருவமும் இளித்தது. அதைக் கண்டு குரங்குக்குக் கோபம் வந்தது. அது கண்ணாடியை உடைத்து விட்டு வெளியே போய் விட்டது.

மனிதன் செய்யும் செயலைக் கண்டு அதுபோல் தானும் செய்ய வல்லது குரங்கு.

## கேள்விகள்

1. குரங்குக்கு ஏன் கோபம் வந்தது?
2. கோபத்தினால் அது என்ன செய்தது?

## பயிற்சி

குரங்கு மனிதர் செய்வதுபோல் தானும் செய்யும் என்பதற்கு வேறு ஒரு கதையைத் தெரிந்துகொள்ளுங்கள். (தொப்பி வியாபாரியும் குரங்குகளும்.)

---

ஆவணக் காப்பக நிலையம்
133572

# 32. திருட்டுப் பூனை

**நாம்** வீட்டில் பூனையை வளர்க்கிறோம். அது நாம் கொடுக்கும் ஆகாரத்தை உட்கொள்ளுகிறது.



தாகை வீட்டில் எதையும் அது திருடித் தின்ப தில்லை. சில பூனைகள் எவராலும் வளர்க்கப்படுவ தில்லை. அவை தாமாக வீட்டிற்கு வீடு அலைந்து திரிந்து உணவுப் பொருள்களைத் திருடித் தின்று காலம் கழிக்கின்றன.

ஓர் ஊரில் ஒரு திருட்டுப் பூனை இருந்தது. அது வீடுகளில் நுழைந்து எவரும் காணமல் பாலை யும் தயிரையும் திருட்டுத்தனமாகக் குடித்துவிடும். பிறகு மனிதர் கையில் அகப்படாமல் ஓடிவிடும்.

ஓர் இரவில் அது ஒருவர் வீட்டுக்குத் திருட வந்தது. வாய் குறுகலான பாத்திரத்தில் பால் வைத்திருந்தது. பூனை பாலைக் குடிக்கப் பாத்திரத்தில் தலையை விட்டது. எடுக்க முடியாமல் தலை அதில் மாட்டிக்கொண்டது.

பூனை ஓட நினைத்தது. அதற்குக் கண் தெரியவில்லை. அதனால் அது சுவரில் முட்டிக்கொண்டது. பாத்திரங்களின்மேல் விழுந்து அங்கும் இங்குமாக ஓடிற்று.

பாத்திரங்கள் உருளுவதன் சத்தம் கேட்டு வீட்டார் விழித்துக்கொண்டார்கள். அவர்கள் ஒரு கோணிப் பையைக் கொண்டுவந்தார்கள். பூனையைப் பிடித்து அந்தப் பையில் போட்டார்கள். பையை வெகுதூரம் ஒரு காட்டுக்குத் தூக்கிச் சென்றார்கள். அங்கே பூனையை விட்ட பிறகு பாத்திரத்தைக் கழற்றி எடுத்துக் கொண்டுவந்து விட்டார்கள்.

பூனைக்கு ஊருக்குள் வர வழி தெரியவில்லை. அது காட்டிலேயே இருந்தது. முன்போல அதற்கு உருசியுள்ள உணவு கிடைக்கவில்லை. திருட்டுப் பூனைக்கு அதுவே தண்டனை.

### கேள்விகள்

1. நாம் வளர்க்கும் பூனைக்கும் எவரும் வளர்க்காத பூனைக்கும் வித்தியாசம் என்ன?
2. பூனையின் திருட்டு எப்படி வெளியாயிற்று?
3. அது பெற்ற தண்டனை யாது?

### பயிற்சி

1. வாக்கியத்தில் அமைக்க: எவராலும், தானாக, திருட்டுத்தனமாக, குறுகலான, தண்டனை.
2. வீட்டில் வளர்க்கும் பிராணிகள் எவை?

———



## 33. திருவிழா

திருவிழா திருவிழா!
தேர் ஓடும் திருவிழா!
ஆனைமேலே அம்பாரி வைத்து
ஆடிவரும் திருவிழா!
கொடிபிடிக்கும் திருவிழா!
கொம்மாளத் திருவிழா!
இடியைப் போல நகராக்கள்
இடித்து முழங்கும் திருவிழா!



## 34. அம்புலி வேண்டிய இராமன்

குழந்தைகளே! நீங்கள் இராமன் படத்தைப் பார்த்திருப்பீர்கள். இராமனைப் பற்றிய கதை இராமாயணம் எனப்படும். இராமாயணம் இனிமையான கதை. அம்மாவையும் அப்பாவையும் கேட்டு அந்தக் கதையைத் தெரிந்துகொள்ளுங்கள்.

இராமன் குழந்தையாக இருக்கும்போது ஒரு நாள் பௌர்ணமிச் சந்திரனைப் பார்த்தான். அது தனக்கு வேண்டும் என்று அவன் அழுதான். ஆகாயத்தில் உள்ள சந்திரனை எப்படிக் கொண்டுவந்து கொடுப்பது? யாரால் அது முடியும்? இராமன் அழுகையை நிறுத்தவே இல்லை.

இராமனுடைய தாயின் பெயர் கோசலை. அவள் எத்தனையோ விளையாட்டுப் பொருள்களை

இராமனுக்குக் கொடுத்தாள். இராமன், "எனக்கு வேறு ஒன்றும் வேண்டாம்; சந்திரன்தான் வேண்டும்" என்று அடம் பிடித்தான்.

பிறகு அங்கே பெரியவர் ஒருவர் வந்தார். அவர் மிகவும் கெட்டிக்காரர். முகம் பார்க்கும் கண்ணடி ஒன்றை அவர் கொண்டு வந்தார். அந்தக் கண்ணடியை இராமன் கையில் கொடுத்தார். சந்திரனுடைய உருவம் கண்ணடியில் படும்படி அவர் இராமனை நிறுத்தினர்.

மதியின் உருவம் கண்ணடியில் நன்ருகத் தெரிந்தது. அதைக் கண்டு ராமன் அழுகையை நிறுத்திவிட்டான். அந்த உருவத்தைப் பார்த்துப் பார்த்து அவன், 'அம்புலிமாமா, அம்புலிமாமா!' என்று மகிழ்ச்சிகொண்டான். குழந்தைகள் சந்திரனை அம்புலி மாமா என்பார்கள்.

### கேள்விகள்

1. இராமாயணம் என்பது யாது?
2. இராமன் ஒரு நாள் ஏன் அழுதான்?
3. இராமன் பிடிவாதம் உள்ளவன் என்பது எதனுல் தெரிகிறது?
4. பெரியவர் இராமனுடைய அழுகையை எப்படி நிறுத்தினுர்?

### பயிற்சி

கோடிட்ட இடத்தில் தகுந்த சொல்லைச் சேர்த்து எழுதுக.

இராமன்———எனப்படும்.

இராமாயணம்———கதை.

"எனக்கு———வேண்டாம்;———வேண்டும்" என்று இராமன்———.

# செய்யுட் பாடம்

## 1. ஆத்தி சூடி

அறம் செய விரும்பு.
ஆறுவது சினம்.
இயல்வது கரவேல்.
ஈவது விலக்கேல்.
உடையது விளம்பேல்.
ஊக்கமது கைவிடேல்.
எண் எழுத்து இகழேல்.
ஏற்பது இகழ்ச்சி.
ஐயம் இட்டுண்.
ஒப்புர வொழுகு.
ஓதுவது ஒழியேல்.
ஔவியம் பேசேல்.
கண்டொன்று சொல்லேல்.
ஙப்போல் வளை.
சனி நீராடு.
ஞயம்பட உரை.
தந்தை தாய் பேண்.
நன்றி மறவேல்.
பருவத்தே பயிர்செய்.
வஞ்சகம் பேசேல்.

# 2. உலக நீதி

ஓதாமல் ஒருநாளும்
இருக்கவேண்டாம்;
ஒருவரையும் பொல்லாங்கு
சொல்லவேண்டாம். 1

மாதாவை ஒருநாளும்
மறக்கவேண்டாம்;
வஞ்சனைகள் செய்வாரோ
டிணங்கவேண்டாம். 2

போகாத இடந்தனிலே
போகவேண்டாம்;
போகவிட்டுப் புறஞ்சொல்லித்
திரியவேண்டாம். 3

அஞ்சாமல் தனிவழியே
போகவேண்டாம்;
அடுத்தவரை ஒருநாளும்
கெடுக்கவேண்டாம். 4

மூத்தோர்சொல் வார்த்தைதனை
மறக்கவேண்டாம்;
முன்கோபக் காரரோ
டிணங்கவேண்டாம். 5

நெஞ்சாரப் பொய்தன்னைச்
சொல்லவேண்டாம்;
நஞ்சுடனே ஒருநாளும்
பழகவேண்டாம். 6

தனந்தேடி உண்ணாமற்
புதைக்கவேண்டாம்;
தருமத்தை ஒருநாளும்
மறக்கவேண்டாம். 7

குற்றமொன்றும் பாராட்டித்
திரியவேண்டாம்;
கற்றவரை ஒருநாளும்
பழிக்கவேண்டாம். 8

செய்தநன்றி ஒருநாளும்
மறக்கவேண்டாம்;
தெய்வத்தை ஒருநாளும்
மறக்கவேண்டாம். 9

---

133572

## 3. பாப்பாவுக்குப் புத்திமதி

காலை எழுந்தவுடன் படிப்பு—பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு
மாலை முழுதும்விளை யாட்டு—என்று
வழக்கப் படுத்திக்கொள்ளு, பாப்பா! 1

பொய்சொல்லக் கூடாது, பாப்பா!—என்றும்
புறஞ்சொல்ல லாகாது, பாப்பா!
தெய்வம் நமக்குத் துணை, பாப்பா!—ஒரு
தீங்குவர மாட்டாது, பாப்பா. 2

துன்பம் நெருங்கிவந்த போதும்—நாம்
சோர்ந்துவிட லாகாது, பாப்பா!
அன்பு மிகுந்ததெய்வம் உண்டு;—துன்பம்
அத்தனையும் போக்கிவிடும், பாப்பா! 3

சோம்பல் மிகக்கெடுதி, பாப்பா!—தாய்
சொன்னசொல்லைத் தட்டாதே, பாப்பா!
தேம்பி அழுங்குழந்தை நொண்டி;—நீ
திடங்கொண்டு போராடு, பாப்பா! 4

உயிர்களிடத்தில்அன்பு வேணும்;—தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்;
வயிர முடையநெஞ்சு வேணும்; இது
வாழும் முறைமையடி, பாப்பா!

—பாரதியார்

RTR/660 1C

# KANNAN VACHAKAM

(TAMIL)

STANDARD II

(Approved by the Text-Book Committee of Madras for Class use)

*Copyright*] [*Price As. 6*

Kalaimagal Office
Post Box 604, Madras 4